## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 77/2016

| | |
|---|---|
| Ranking of Witness | **RW. 2** |
| Name | Ms.விஜயலட்சுமி |
| Father's Name | திரு. முனுசாமி |
| Age | 52 |
| Address | உதவி மேலாளர், New india Assurance நிறுவனம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026.

**முதல் விசாரணை –**

நான் இந்த வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தின் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உண்மை என்று உறுதி கூறுகிறேன். 11.10.2025 தேதியிட்டு முதல் எதிர்மனுதாரருக்கு எங்கள் தரப்பில் வழங்கப்பட்ட குறிப்பாணை அலுவலக நகல் **எ.த.சா.ஆ.5**. 11.10.2025 தேதியிட்டு 4 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு எங்கள் தரப்பில் வழங்கப்பட்ட குறிப்பாணை அலுவலக நகல் **எ.த.சா.ஆ.6.** எனது அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **எ.த.சா.ஆ.7.** TN09AC1212 வாகனத்தின் காப்பீடு சான்று நகல் **எ.த.சா.ஆ.8.** மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரர் விபத்திற்கு பிறகு சென்னை குரோம்பேட்டை பார்வதி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவராகவே தவறி வண்டியிலிருந்து விழுந்துவிட்டதாக தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் தவறி

27/1/26

27/01/2026

விழுந்ததால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். அதனால் மனுதாரர் இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான்.

**4 முதல் 7 எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3ம் எதிர்மனுதாரரிடம் வாகனம் விற்கப்பட்டது தொடர்பான விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் தான். 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் வாகனத்திற்கு உரிமையாளர்கள் இல்லை என்பதால் அவர்கள் எந்த இழப்பீடும் வழங்கவேண்டியது இல்லை என்று சொன்னால் சரிதான்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எங்களது நிறுவனத்தின் தரப்பில் விபத்து தொடர்பாக மேற்கொண்ட விசாரணை அறிக்கையை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான காரணமும் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று எனது அனுமானத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களது விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தால் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ள விவரமும், விபத்தானது 4 சக்கர வாகனத்தினால் தான் ஏற்பட்டது என்ற விவரமும் தெரியவந்துவிடும் என்பதால் தான் விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் தான் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தனது வாகனத்தை விற்பனை செய்துவிட்டதாகவோ, அதனால் காப்பீடை

27/1/26

27/01/26

விற்பனை செய்தவரின் பெயருக்கு மாற்றம் செய்யுமாறோ எங்கள் நிறுவனத்திடம் எந்தவிதமான கடிதமும் 1ம் எதிர்மனுதாரர் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை விற்பனை செய்யாததால் தான் அதுபோன்று எந்த கடிதமும் எங்களுக்கு வழங்கவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எங்களது விசாரணையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை விற்பனை செய்திருந்தால் அந்த விவரம் தெரியவந்திருக்கும் என்றும், அதனால் தான் அந்த விசாரணை அறிக்கையை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாகன பதிவுச்சான்றிதழ் விபத்து நடந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு இழப்பீடு வழங்குவதிலிருந்து விடுவிப்பதற்காகவே இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எ.த.சா.ஆ.3 மருத்துவ ஆவணத்தில் பார்வதி மருத்துவமனையில் தகவல் அளித்தவர் சக்திவேல் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,ஆனால் மனுதாரர் இருசக்கர வாகனத்திலிருந்து தானாக விழுந்து காயம் ஏற்பட்டதாக மருத்துவமனையில் கூறியதாவது மனுதாரர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் கோரியவாறு மனுவில் உத்தரவாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை - இல்லை**</u>

27/01/26

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 27.01.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

27/1/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.